செ.வெ.எண்.56 நாள்: 20.10.2017

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.10.2017) நடைபெற்றது. விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது: -

விவசாயிகளின் குறைகளை தீர்க்கும் வகையில், தமிழக அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் பருவ மழை இம்மாதம் இயல்பான அளவைக்காட்டிலும் சிறிது குறைந்த அளவு கிடைக்கப்பெற்றுள்ளது. பாபநாசம் அணை 5.10.2017 அன்று பிசான பருவ சாகுபடிக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. வினாடிக்கு 1400 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. சாகுபடிக்காக திருநெல்வேலி மாவட்டத்தின் 7 கால்வாய்களிலும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது 987 ஹெக்டர் சாதாரன நாற்றங்காளும், 18 ஹெக்டர் பாய் நாற்றங்காளும் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 2205 ஹெக்டர் நெல் நடவு பணிகள் முடிந்துள்ளது. தற்போது பிசான நெல் நடவு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 60,000 ஹெக்டரில் பிசான நெல் பயிர் சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பாபநாசம் அணையில் தற்போது 75 அடி நீர் இருப்பு உள்ளது. சேர்வலாறு, மணிமுத்தாறு, மற்றும் பாபநாசம் அணையின் நீர் இருப்பை பொருத்து தண்ணீர் திறக்கப்படும் இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை அதிக அளவில் பெய்யும் என எதிர்பார்க்கபடுகிறது. விவசாயிகளுக்கு பிசான பருவ பயிர் சாகுபடிக்கு தேவையான உரம் மற்றும் விதைகளும் தேவையான அளவு இருப்பில் உள்ளது. கடந்த மாதம் வரை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 373 மனுக்களில் வேளாண்மை சார்ந்த மனுக்கள் 203 மற்றும் வேளாண்மை சாராத 170 மனுக்களுக்கும் பதில்கள் பெறப்பட்டு விவசாயிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த ஆண்டு நெற்பயிருக்கு காப்பீடு செய்யப்பட்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட 8464 விவசாயிகளுக்கு காப்பீட்டு தொகை வாங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. 1026 விவசாயிகளுக்னு ஐசிஐசி வங்கியின் மூலம் நவம்பர் 10 ஆம் தேதிக்குள் காப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் புதியதாக பயிர் செய்யும் விவசரயிகளுக்கு தேவையான பயிர் கடன் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என பேசினார்.

மேலும் அலுவலர்களிடம் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொண்டு பதில்களை வழங்க வேண்டும் என உத்தரவிட்டார். முன்னதாக தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடை

பராமரிப்புத் துறை ஆகிய துறைகளின் மூலம் அமைக்கப்பட்ட காண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.செந்தில் வேல்முருகன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் திரு.ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.